மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிருவாகக் காரணங்களுக்காக பெரிய சுகாதார மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. இது அரசினுடைய கொள்கை முடிவாக இருக்கிறது. வரக்கூடிய காலங்களில் அங்கு இருக்கக்கூடிய* blocks, *அதாவது ஒன்றியங்களின் எண்ணிக்கையினுடைய அடிப்படையில் அரசு அதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

வீட்டுமனைப் பட்டா

***27835—திரு. எஸ். அம்பேத்குமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வெடால் கிராமம், இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், வெடால் கிராமத்தில் வசித்துவந்த இருளர் குடும்பங்களில், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, மேற்படி பகுதிகளிலே கிராம புல எண் 246/8*B*–ல் வசித்து வந்த 14 நபர்களுக்கு ஒரு முறை வரைமுறைப்படுத்துகிற திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. ஏனைய 13*

2019 ஜூலை 8]

குடும்பங்களுக்கு அந்தப் பகுதியில் போதிய இடமின்மையின் காரணமாக வெடால் கிராம கள்ளாங்குத்து புறம்போக்கு புல எண் 232/1–ல் 5.34.0 ஹெக்டேரில் 0.13.0 ஏர்ஸ் பரப்பினை, கிராம நத்தமாக வகை மாற்றம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் வட்டாட்சியர் மற்றும் தனி வட்டாட்சியருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. எஸ். அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில்,* 38 out of 39 *என்ற கணக்கில், தனது கடின உழைப்பாலும், சிரித்த முகத்தாலும் மாபெரும் வெற்றியைக் கண்டு, தமிழக அரசியல் வரலாற்றில், ஏன் இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு மாபெரும் சக்திவாய்ந்த தலைவராகத் திகழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் கழகத் தலைவர், வணக்கத்துக்குரிய அண்ணன் தளபதி அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்ட முன்னாள் உணவுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதிக்குட்பட்ட வெடால் ஒன்றியத்தில் இருளர் சமுதாயத்தினர் வசிக்கும் இந்திரா நகர் பகுதியில் 13 குடும்பத்தினருக்கு பட்டா வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அங்கு சுமார் 20 குடும்பங்களுக்குமேல் இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பணியினைத் துரிதப்படுத்த வேண்டும். அதேபோல், வந்தவாசி தொகுதிக்குட்பட்ட தெள்ளார் கிராமம், அகரகொரக்கோட்டை கிராமம், அரசூர் மற்றும் இராமசமுத்திரம் போன்ற பல்வேறு கிராமங்களில் அதிகமாக வசிக்கின்ற இருளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு இருளர் குடும்பங்களினுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 20 பேருக்கு மேல் பட்டா வழங்கப்படவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, கூட்டுக் குடும்பத்திலே இருப்பவர்கள் இந்தக் கோரிக்கையை வைக்கின்றபோது அது பரிசீலனைக்குட்படுத்தப்படுகிறது. அந்த வகையில்தான், இது ஆய்வு செய்யப்பட்டு மாவட்ட நிருவாகத்தால் இந்த விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த விவரத்தையும் மாவட்ட நிருவாகத்திற்குத் தெரிவித்து, அந்தக் குடும்பங்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டா வழங்குவதற்கும், அவர் சொன்ன பிற பகுதிகளுக்கு பட்டா வழங்குவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தக்க பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் சுமார் 500 குடும்பங்களுக்குமேல் இருளர் சமுதாயத்தினர் வசித்து வருகின்றனர். அந்தக் குடும்பங்கள் மழைக் காலங்களிலும் சரி, வெயில் காலங்களிலும் சரி, மிகுந்த கஷ்டப்பட்டு, துன்பப்பட்டு வாழ்கின்ற சூழ்நிலை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. ஆகவே, அப்பணிகளைத் துரிதப்படுத்தி, அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கினால், தமிழக அரசாலும், மத்திய அரசாலும் வழங்கப்படும் வீடு அவர்களுக்குக் கிடைக்கும்; அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவார்கள். அதுமட்டுமல்ல; எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிகம் வசிக்கின்ற இருளர் சமுதாயத்தைச் சேர்ந்த அனைவரையும் கணக்கெடுத்து, உடனடியாக இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2019 ஜூலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையைப்போல, இந்த மாமன்றத்தில் இருக்கிற 234 உறுப்பினர்களுக்கும் அவரவர் தொகுதிகளிலே இதுபோன்ற கோரிக்கைகள் நிலுவையில் இருக்கிற காரணத்தினால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால், நீர்நிலைப் புறம்போக்குகள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் ஏழை மக்களுக்கு நிரந்தரமாக வீடு வழங்க வேண்டுமென்பதற்காகவும், இத்தகைய நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து உரிய செயல்பாட்டிற்கு உட்படுத்தும் வகையிலும், சம்பந்தப்பட்ட கிராமங்களில் வருவாய்த் துறை மூலமாக தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி ஏழை குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கும் புதிய திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தும் என்றும், வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் குடும்பங்களுக்கு ஊரக வளர்ச்சித் துறை மூலமாக தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்களின்கீழ் விதிமுறைகளுக்குட்பட்டு வீட்டு வசதி வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இது ஒரு வரப்பிரசாதமான திட்டம்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10–45

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவாறு, இருளர் சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை மக்கள் வெயிலிலும் மழையிலும் நனைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்தில்கொண்டுதான், ஒட்டுமொத்தமாக ஏழை மக்களை இதுபோன்ற துயரங்களிலிருந்து விடுவிப்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அரசாணை எண் 465 மற்றும் அரசாணை எண் 496–ஐ வெளியிட்டிருக்கிறது. ஆனால், பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற காரணத்தினால் 3 மாதகாலம் அதைச் செயல்படுத்த முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்ட காரணத்தினால், அதை நீட்டிப்புச் செய்வதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் அறிவுரை பெற்று தற்போது அரசுக்குப் பரிந்துரை

செய்யப்பட்டிருக்கிறது. மிக விரைவிலே அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லவர் இலட்சியம் வெல்வது நிச்சயம். "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மாவின் நல்லாட்சியைத் தொடரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய விருகம்பாக்கம் தொகுதி, 127–வது வட்டத்திலுள்ள கோயம்பேடு வணிக வளாகம் அருகில் சேமாத்தாள் நகர் 1–வது செக்டார், 2–வது செக்டார், 3–வது செக்டார் பகுதிகளில் சுமார் 500 குடும்பங்கள் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகின்றன. அவர்களுக்கு மின்சாரம், குடிநீர், பாதாள சாக்கடைத் திட்டம், சாலை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இன்றுவரை பட்டா கிடைக்கவில்லை. ஆகவே, அவர்களுக்குப் பட்டா கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையாக வசிப்பதற்கு இடம் வழங்குவது மாண்புமிகு அம்மாவின் கொள்கையாகும். அந்தவகையிலே ஒப்படை செய்வதற்கு எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கெல்லாம் தகுதியுள்ள நபர்களுக்கு அரசாணை (நிலை) எண் 21–ன்கீழ் வரையறைக்குட்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன்

இந்த அவையில் பதிவு செய்கின்றேன். கடந்த 8 ஆண்டுகளில் 20 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில், ஏழை எளியவர்களுக்கு 23 இலட்சம் பட்டாக்கள் வழங்கிய அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதை இந்த மன்றத்திலே நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதி மக்கள் நீண்ட நெடுங்காலமாக அந்தப் பகுதியில் வசித்து வருகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 5 ஆண்டுகாலம் அரசு நிலங்களில் குடியிருப்பு ஆக்கிரமணங்கள் செய்திருந்தால் அந்த நிலத்தை அவர்களுக்கு வீட்டடி மனைகளாகப் பயன்படுத்துவதற்கு வரைமுறை செய்து கொடுக்கிற திட்டமும் இருக்கிறது. ஆனால், தடையாணை இருக்கின்ற மாவட்டங்களில் அதை வழங்குவதற்கு சிறப்பு பரிசீலனையும் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் தொகுதி சார்ந்த மக்களுக்காக வைக்கின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் நானே நேரில் சென்று அங்கே பட்டா வழங்கியிருக்கிறேன் என்பதையும், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக நத்தம் புறம்போக்குப் பகுதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டாக்கள் மற்றும் பட்டா பூமியில் வழங்கப்பட்ட updating survey இதுவரையில் புதுப்பிக்கப்படாமலும், மறுவரையறை செய்யப்படாமலும், பல்வேறு வழக்குகள் மற்றும் பிரச்சினைகளுக்குக் காரணமாகவும் அமைந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தற்போது SF–7, SF–8 உள்ளிட்ட நத்தத்தில் இருக்கின்ற இடங்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்றால் அது அரசுக்கு வரவேண்டிய சூழ்நிலையில் மக்கள் பல்வேறு வகைகளில் அலைக்கழிக்கப்படுகின்றனர். வீண் விரயங்களும் ஏற்படுகின்றன. ஆகவே உடனடியாக, துரிதமாக அந்த இரண்டு வகைப்பாட்டு நிலங்களுக்கும் updating survey-ஐ அமல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் வகைப்பாட்டிலே பட்டாக்கள் வழங்குவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. மாவட்ட நிருவாகமே அதை வழங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, அதுகுறித்த கருத்துரு அரசுக்கு வர வேண்டும் என்பது இல்லை. மாவட்ட நிருவாகமே குழு அமைத்து, பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. Updating survey என்பதற்கும், பட்டா வழங்குவதற்கும் சம்பந்தம் இல்லை. ஆனால், வகைப்பாடுகளை மாற்றுவதற்கான கருத்துரு அரசுக்கு வர வேண்டியிருக்கிறது. நத்தம் என வகைப்பாடு மாற்றுவதற்கான கருத்துருதான் அரசுக்கு வருகின்றதே தவிர, நத்தமாக இருக்கிற நிலங்களுக்குப் பட்டா வழங்குவதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தகுதியுள்ள நபர்களுக்கு பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

57—

கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை

***12741—திரு. அ. ராமு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, கீழ்கோத்தகிரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?